செ.வெ.எண்: /2021 நாள்: 11.08.2021

**விருதுநகர் மாவட்டம்**
**உலகத்தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிறப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

**-------**

விருதுநகர் மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், இன்று(11.08.2021) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மூலம் உலகத்தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிறப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

உலக தாய்ப்பால் வார விழா ஆகஸ்டு 1முதல் 7 வரை உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசு தாய்க்கும் சேய்க்கும் பல நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி மக்களின் நலனில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு பொதுமக்களிடையே தாய்பால் கொடுப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இன்று அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிறப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த வாகனம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடங்கி, விருதுநகர் பழைய பேருந்து நிலையம், எரிச்சநத்தம் வழியாக வத்திராயிருப்பு வரை சென்று பொதுமக்களிடையே தாய்மார்கள் உண்ண வேண்டிய ஊட்டச்சத்து உணவு மற்றும் பிறந்த குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தாய்ப்பாலின் அவசியம் உள்ளிட்டவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக, பிரசவித்த அனைத்து தாய்மார்களும், தாய்ப்பால் கொடுப்பதை தீவிரமாக ஆதரிக்க நாங்கள் உறுதியளிக்கிறோம். தாய்ப்பால் கொடுப்பதை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், ஆதரிக்கவும் எங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்வோம். தாய்மார்கள், குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர பிற திரவங்களான மாட்டுப்பால், பால் பவுடர், தேன், சர்க்கரை தண்ணீர் தருவதை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம் என்பதை உறுதி கூறுகிறோம். சாதாரண மற்றும் சிசேரியன் பிரசவங்களிலும் தாய்ப்பால் கொடுப்பதை நாங்கள் உறுதி செய்வோம். குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுப்பதையும், மற்றும் ஆறு மாத காலத்திற்கு தாய்ப்பால் மட்டுமே கொடுப்பதையும் உறுதி செய்வோம் என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி.,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், உலக தாய்ப்பால் வாரத்தை முன்னிட்டு, தாய்ப்பால் கொடுப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தாய்மார்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.மனோகரன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சங்குமணி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.தங்கலெட்சுமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்) திரு.சக்கரவர்த்தி, மாவட்ட திட்ட உதவியாளர் திரு.மணிகண்டன், தாய்மார்கள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**